03.04.2024 அ.வ. எண். 141/2017 வா.சா. 2 ராஜேஸ்வரி

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி எல்லம்மாள் என்னுடைய தாயார். சென்னையில் இருந்து வந்துள்ளேன். 2001 ஆம் ஆண்டு எனக்கு திருமணம் ஆனது. திருமணம் ஆனது முதல் சென்னையில் வசித்து வருகிறேன். என் தாயார் 2001 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்தே சென்னையில் இருக்கிறார். என் தாயார் 40 ஆண்டுகள் சென்னையில் இருக்கிறார் என்றால் எனக்கு படிக்கத்தெரியாது, வருவோம் போவோம். 1ம் பிரதிவாதி என்னுடைய அத்தை. 1ம் பிரதிவாதி என் தகப்பனாருடன் பிறந்த சகோதரி. என் தகப்பனார் பெயர் வெங்கடேசன். குள்ளியம்மாள் என் தகப்பனாரின் தாயார். என் சித்தப்பா மகன் சக்திவேல் சொத்தை அபகரித்துவிட்டார் என்பதற்காக என் தாயார் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சொத்தை எந்த வருடம் அபகரித்தார் என்றால் வருடம் தெரியாது. அரசாங்க சொத்தை என் தாயார் போராடி வாங்கினார். சொத்தில் கடக்கால் போட்டு ஓலைவீடு கட்டியுள்ளோம். குழாய் தண்ணீர், கழிவறை கட்டியுள்ளோம். அதற்கு ஆதாரம் என் தாயார் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. தாவா சொத்தில் குடிநீர் இணைப்பு, கழிவறை எதுவும் இல்லை என்றும், இருப்பதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சென்னையில் இருந்ததால் என் பாட்டி குள்ளியம்மாள் அத்தை வீட்டில் இருந்தார். குள்ளியம்மாள் அத்தை வீட்டில் இருந்தபோது தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் எந்த காலத்திலும் சொத்தை அனுபவிக்கவில்லை என்றும், குள்ளியம்மாள் தான் சொத்தை அனுபவித்து வந்தார் என்று சொன்னால் தவறு. தாவா சொத்து சம்மந்தமாக தாவா சொத்து கிராமத்தில் எனக்கோ என் தாயாருக்கோ எந்தவித ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் குடும்ப அட்டையை தாக்கல் செய்துள்ளார். என் பாட்டி குள்ளியம்மாள் இறந்ததற்கு நாங்கள் வரவில்லை என்று சொன்னால் அவர்கள் சொல்லவே இல்லை. குள்ளியம்மாளுக்கு என் தாயார் எந்த சவரட்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. குள்ளியம்மாளுக்கும், எனக்கும் என் தாயாருக்கும் பேச்சுவார்த்தையே இல்லை என்பதால் தான்

குள்ளியம்மாள் இறந்ததற்கு நாங்கள் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயாருக்கும், குள்ளியம்மாளுக்கும் பேச்சுவார்த்தையே இல்லை என்றும், என் தாயார் குள்ளியம்மாளை பராமரித்து வந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளும், தேவதாஸ் என்பவரும் குள்ளியம்மாளை தூண்டிவிட்டு பிரச்சனை செய்துவந்ததாக தவறாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயார் இவ்வழக்கை எப்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்று தெரியாது. குள்ளியம்மாள் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை எப்போது கிரயம் கொடுத்தார் என்றால் தெரியாது. தாவா சொத்தை என் தாயார் அனுபவிக்காத காரணத்தினால் தான் மறுசீரமைப்பு செய்து குள்ளியம்மாள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. குள்ளியம்மாள் பெயருக்கு பட்டா வழங்கியபோது என் தகப்பனார் வெங்கடேசனுக்கும் பட்டா வழங்கினார்கள் என்றால் தெரியாது. ஒரே குடும்பத்தில் 2 நபர்களுக்கு பட்டா வழங்கக்கூடாது என்பதற்காக என் தகப்பனார் பெயருக்கு பட்டா வழங்கிவிட்டு குள்ளியம்மாள் பெயருக்கும் பட்டா வழங்கினார்கள் என்று சொன்னால் தவறு. மேற்சொன்ன விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு பட்டா கொடுத்த இடத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் இல்லை. என் தாயார் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள் என்று செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எப்போது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. என் தாயார் செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி விசாலாட்சிக்கு குள்ளியம்மாள் கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அது தவறு. குள்ளியம்மாள் கிரயம் கொடுத்துவிட்ட பிறகு அந்த சங்கதியை மறைத்து என் தாயார் செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றும், அந்த விவரமும் எனக்கு தெரியும் என்றும் அதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார்

பெயருக்கு எப்போது பட்டா வழங்கினார்கள் என்றால் வருடம் தெரியாது. 1ம் பிரதிவாதி விசாலாட்சி கிரயம் பெற்று 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா பெற்று 1ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதி 02.05.2014 ஆம் தேதி உரிய மறுபயனுக்கு கிரயம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன விவரமும் எனக்கும் என் தாயாருக்கும் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என் தாயார் ஆலத்தூர் கிராம நிர்வாக அலுவலருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் தெரியாது. 2014 ஆம் ஆண்டு கடிதம் அனுப்பிவிட்டு காலம் கடந்து 2017 ஆம் ஆண்டு என் தாயார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 01.07.2016 ஆம் தேதி என் தாயார் வில்லங்க சான்று பெற்று பார்த்ததாக கூறியுள்ளார் என்றால் தெரியாது. என் தாயாரோ, என்னை சார்ந்தவர்களோ 35 வருடங்களாக தாவா சொத்தில் சுவாதீன அனுபவித்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உரிய மறுபயனுக்கு கிரயம் பெற்று தாவா சொத்தை அனுபவித்துவருகிறார் என்றும், தாவா சொத்தில் என் தாயாருக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி என்னுடைய தாயார் என்பதால் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

மறுவிசாரணை

இல்லை.